**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 81/2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : சகாதேவன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : பெரியகருப்பத்தேவர் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டி சமத்துவபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். சாட்சி ஸ்டெல்லாகண்ணகி எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவம் நடந்து 5 அல்லது 6 வருடங்கள் ஆகிறது. அன்றையதினம் இரவு 07:00 மணியளவில் எனது வீட்டு முன்பு தெருக்குழாய் அருகே எனது மனைவி எதிரியுடன் பேசி பழகி வந்தது குறித்து நான் எனது மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரி ஏன் அவளுடன் சண்டை போடுகிறாய் என்று சொல்லி என்னை அடிக்க வந்தார். எதிரி பேண்ட் பாக்கெட்டில் இருந்த கத்தியை எடுத்து எனது இடதுபக்க இடுப்பில் குத்தி ரத்த காயத்தை ஏற்படுத்தினார். அந்த காயத்தால் எனது வேஷ்டி முழுவதும் ரத்தத்தால் நனைந்தது. அப்போது எனது மகளும் உடன் இருந்தார். எனது மகளுக்கு அப்போது 16 வயது இருக்கும். அப்போது பக்கத்தில் இருந்த சாட்சிகள் சரவணன், அவரது மனைவி மகாலட்சுமி, சின்னசாமி, அவரது மனைவி பாண்டியம்மாள், ஆகியோர் எதிரியை விலக்கிவிட்டார்கள்.

2. என்னை பக்கத்துக்கடைக்காரர் ராமன் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் சுமார் 6 நாட்கள் உசிலம்பட்டி

அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன்பின்னர் தனியார் மருத்துவமனையில் நான் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவமனையில் வைத்து நான் போலீசாரிடம் புகார்வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**அந்த புகார்வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது மனைவி தற்போது வரை எதிரிக்கு ஆதரவாக இருந்து வருகிறார். எனது குழந்தைகளின் படிப்பை நிறுத்திவிட்டு எதிரி திருப்பூரில் வேலைக்கு சேர்த்துவிட்டார். நான் தான் அவர்களை அழைத்து வந்து எனது மகளை நான் படிக்கவைத்து வருகிறேன். எனது மகள் தற்போது கல்லூரியில் படிக்கிறார், எனது மகன் தற்போது பிளஸ்டூ முடித்துள்ளார். நான் விறகு வியாபாரம் செய்து வருகிறார். திருப்பூரில் எனது மனைவியும் மகனும் இருந்து வருகிறார்கள். எனது மகள் என்னுடன் இருந்து வருகிறார். எனது வீட்டையும் ஒரு லட்சம் ரூபாய்க்கு ஒத்தி வைத்து எனது மனைவி அந்த பணத்தில் எதிரிக்கு கார் வாங்கி கொடுத்துள்ளார். அந்த கார் தற்போது குண்டடம் காவல் நிலையத்தில் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சான்று பொருளை குறியீடு செய்வதற்காகவும் முதல் விசாரணை தொடர்ச்சிக்காகவும் ஒத்தி வைக்கப்படுகிறது)**

S.d./ Sahadevan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.